# பத்ரகாளி அம்மன் ஆலய விவகாரம்
# 3 தரப்புகள் மட்டும் பேசட்டும் மற்றவர்கள் விலகி நில்லுங்கள்



கோலாலம்பூர், மார்ச் 24-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவி ஸ்ரீ பத்ர காளியம்மன் ஆலய விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் அதை பேசித் தீர்க்க விட்டு விட வேண்டும் என்று தொடர்புத் துறை அமைச்சர் டத்தோ ஃபாமி ஃபட்ஸில் நேற்று கேட்டுக் கொண்டார்.

நில உரிமையாளர்களும் ஆலய நிர்வாகமும் இந்த விவகாரத்தை கோலாலம்பூர் மாநகர் மன்றத்தோடு பேசி தீர்க்கட்டும். மற்றவர்கள் யாரும் தலையிட வேண்டாம் என்றார் அவர்.

பக்கம் 13

முதல்பக்கத் தொடர்ச்சி...

## பத்ரகாளி அம்மன்....

அந்த நில உரிமையாளரும் ஆலய நிர்வாகமும் இந்த விவகாரத்தை சுமுகமாக தீர்க்க விரும்புகின்றனர். அதற்கான ஏற்பாட்டை மாநகர மன்றம் செய்து வருகிறது. இந்த முத்தரப்பு மட்டும் இப்பிரச்சினையை தீர்க்க பேச்சு வார்த்தை நடத்தட்டும்.

மற்றவர்கள் யாரும் தலையிட வேண்டாம். அதிலிருந்து விலகி நில்லுங்கள் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். நேற்று முன்தினம் லெம்பா பந்தாய் மக்களோடு நோன்பு துறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது இந்த ஆலய விவகாரம் குறித்து கருத்துரைத்தார்.

அந்த இடத்தில் ஜேக்கல் டிரேடிங் நிறுவனம் ஒரு பள்ளிவாசலை கட்ட விரும்புகிறது. அதே நேரத்தில் அந்த ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்ற புதிய இடம் ஒன்றையும் மாநகர மன்றம் பரிந்துரைத்திருக்கிறது.

அந்த ஆலயத்தை அப்புறப்படுத்துவதற்கான செலவுகளை ஜேக்கல் நிறுவனமே ஏற்றுக் கொள்ள விரும்புகிறது. எனவே இதில் மற்றவர்கள் தலையீடு தேவையில்லை என்றார் அவர்.

அண்மையில் சுயேச்சை வழக்கறிஞர்களை கொண்ட ஒரு குழு அந்த ஆலயத்தை அப்புறப்படுத்த வேண்டாம். பள்ளி வாசலை கட்டுங்கள். ஆனால் அந்த ஆலயத்தை அகற்ற வேண்டிய அவசியமில்லை என்று வேண்டுகோள் விடுத்திருந்தது.

அந்த ஆலயம் சுதந்திர காலத்திலிருந்து அங்கு இருந்து வரும் ஒரு பழம் பெரும் ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.